# குடிமக்கள் காப்பியத்தில் அரசரும் மக்களும்

## The King and People in People's Epic

உதவிப் பேராசிரியர் சு. ஏழுமலை
Assistant Professor Dr. S. Elumalai[1]

**Abstract**

Silapathiharam is a standing example for the Artistic excellence of the ancient tamils. This is called People's epic. There was not People's republic in the age of Silapathiharam. There was only the rule of the Kings. They were some kings who gave better government and some did not. But the people considered kings who gave good government in high esteem. They went further to worship such good kings as gods. Just like ministers today take part in public functions, the kings of the past attended in going around the cith and participated in marriages. There was a perfect relation between kings and people. The kings looked into the welfare of the people, public relations, Religion, making the country cool even in summer, respecting the public and patrronising even animals. This Paper proves into how the kings of yester years concentrated in the activities cited above.

**Key Words**: Silapathiharam, Tamil Kings, Justice, Dharma, moral values.

### தலைவாயில்

தொன்மைத் தமிழரின் கலைச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது சிலப்பதிகாரமாகும். இக்காப்பியம் குடிமக்கள் காப்பியம் என்ற தனிச்சிறப்பு முத்திரைப் பெற்ற நூலகத் திகழ்வதாகும். சாத்தனார் உரைத்தாங்கு முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய செய்திகளும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் வெளிப்படுத்துவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் மக்கள் ஆட்சி இல்லை. மன்னர் ஆட்சி தான் நிலவியிருந்தது. மன்னர்களுக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. ஆயினும் நீதி முறையுடனும் ஆளும் மன்னர்கள்தான் மக்களால் மதிக்கப்பட்டனர(...........) அறநெறி தவறாமல் ஆளவேண்டும். நாட்டு மக்களுக்கு எவ்வித இடையூறும் உண்டாகாமல் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு அரசாளும் மன்னர்களை மக்கள் அனைவரும் தெய்வம் என்றே போற்றி

[1] Author is a lecturer in the Department of Tamil Studies, Pachaiyappa's College for Men, Kanchipuram, Tamil Nadu, India. elumalais7hills@gmail.com

வந்தனர். அத்தகைய மன்னர்கள் தெய்வ நிலையின் அவதாரமாகவே மக்களால் மதிக்கப்பட்டனர் என்பது பண்டைக்கால மன்னர்களின் நிலைமை ஆகும். "அமைச்சு" என்ற அதிகாரத்தில் மன்னனைப் பற்றிக் கூறவரும் திருவள்ளுவர்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்" (388)

என்று விளக்கியிருப்பது இவண் ஒப்பு நோக்கத் தக்கது.

நீதிநெறி முறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் மன்னனை, மக்கள் தெய்வமாகவே மதித்துப் போற்றுவார்கள் என்று வள்ளுவர் கூறிய வழிமுறையில்தான் சிலப்பதிகாரத்தில் அரசியல் ஆட்சிமுறை அமைந்துள்ளது.

## மூவேந்தரின் வரலாறு

கண்ணகி நல்லாள் புகாரில் அமைதிப் பெண்ணாகத் தோன்றி, மதுரையில் வீரம் விளைத்து, வஞ்சியில் வானவர் வாழ்வு பெறுகிறாள், என மூவேந்தர்கள் போற்றும் சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்ச் செழுநூல் வழி, புலப்படும் மூவேந்தர்களைப் பற்றி காண்போம்.

### சோழ வேந்தரின் வரலாறு

சோழன் ஆரியருக்கு முன் தென்னாட்டில் வாழ்ந்த கருப்பு மனிதர் என்னும் பொருளில் வழங்கும் கால அல்லது கோல என்ற வடமொழிச் சொல்லில் இருந்தும் வந்தது என்பர் சிலர். சோளம் விளையும் நாடு சோள நாடு. அது சோழ நாடு என்று ஆயிற்று என்பர். சோரன் என்ற சொல்லில் இருந்து சோழன் என்ற சொல் வந்தது என்பர் வேறு சிலர். சோழன் ஆட்சி காலத்தில் சோறு படைப்பள்ளியாய் கிடந்தது அதனால். "சோழ நாடு சோறு உடைத்த நாடு" என்று புலவர்களால் பாடப்பெறலாயிற்று.

சோழ மன்னர் பரம்பரையில் ஒன்பது தாயாதிகள் இருந்தனர். அவர்கள் முடி மன்னனாகிய பெரிய சோழ அரசனுக்குக் கீழ் அடங்கி, சிற்சில நாடுகளை அரசாண்டனர். ஆனால், அவர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இருந்தார்கள் என்று சங்க நூல் கூறுகிறது. கரிகாலச் சோழன் அரசுக் கட்டில் ஏறின போது, ஒன்பது தாயாதிகள் அவனுக்கு எதிராகக் கலகம் செய்து போரிட்டார்கள். அவர்களை எல்லாம் வென்று அடக்கிய பிறகு முடிசூடினான். அவ்வாறு முடிசூடிய பின் புகாரும், உறையூரும் தலைநகரங்களாகச் சிறப்புப் பெற்று இருந்தன என்பதை.

"சோழர் உறத்தை"
"சோழன் மூதூர்ப் போரச் சிறப்பின் புகார்"

என்னும் அடிகள் அறிவிக்கின்றன. அந்நகரங்களில் இருந்து சோழன் ஆட்சி செய்த சிறப்பினையும், பெருமையையும் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது.

## பரிசளித்தல்

கரிகாலச் சோழப் பெருவளத்தான் ஆட்சிக் காலத்தில் கலையில் சிறந்த மாதவிக்கு "தலைக்கோல் அரிவை" என்னும் பட்டம் நல்கிப் பாராட்டினான். தலைக்கோல் அரிவை என்பது நன்மலையில் இருந்து கொண்டுவரப்பட்ட மூங்கில் ஆகும். அல்லது பகைவரிடமிருந்து பெற்ற வெண் குடைக் காம்பாகும். அது "எழுசாண்" நீளம் கொண்டது. அதன் ஒவ்வொரு கணுவிலும் நவமணிகள் பொருத்தப்பட்டு உள்ளன. எஞ்சிய பகுதியில் சம்புநாதம் என்னும் பொற் தகட்டினால் மூடப்பட்டு இருக்கும். மாதவிக்கு அளித்த தலைக்கோல் அரிவையானது பகைவரிடமிருந்து பெற்ற வெண் குடைக்காம்பாகும். மாதவியின் ஆடற்கலைக்காக அளித்தச் சிறப்புப் பட்டத்துடன் நினைவுப் பரிசாக 1008 கழஞ்சு பொன்னும் அளித்துச் சிறப்பித்தான் என்பதை.

"நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதில் மாலை"

என்னும் அடிகளால் அறியமுடிகிறது.

அன்று அரசன் மாதவிக்கு அளித்த 1008 பொற் கழஞ்சு என்பது இன்றைய மதிப்பில்

*48,38,400 ரூபாய் ஆகும். அரசன் கலைக்கு அளித்த பெருந்தொகையை நினைக்கையில் இன்று கலை வல்லுனருக்கு அரசு கொடுக்கும் நினைவுப் பரிசும், பாராட்டும் அதிக தொகை ஒரு லட்சம் ரூபாய் ஆகும். அவற்றின் மதிப்பு பொற்கணக்கில் இருபது சவரன் ஆகும். அன்று அரசன் நல்கிய பொருளுக்கும். இன்று அரசு நல்கும் பொருளுக்கும், ஒப்புமைபடுத்திப் பார்க்கையில் சோழன் அளித்த பரிசுத் தொகை 45 மடங்கு அதிகமாக உள்ளது. ஆதலால், அன்றைய நாட்டு வளமும், இன்றைய நாட்டு நிலையும் கணிக்கையில் அன்று அளித்த மதிப்பு எண்ணுதற்கு அரியதாகும்.*

## நகர் வலம் வருதல்

*கடல் போன்ற பரந்த புகார் நகரில் சோழனின் செங்கோல் சிறந்த முறையில் இருந்தது. இரவு நேரத்தில் குடி மக்களின் நலனுக்காகவும், நாட்டின் பாதுகாவலாகவும், குடிகளில் களவு நேராதவாறும் மக்களின் நலன் பேணியே நள்ளிரவில் அரசன் துஞ்சாது நகர் வலம் வந்தான். மக்கள் மன்னனைக் காப்பதைவிட மன்னன் மக்களைக் காப்பதே நல்லாட்சி ஆகும். அவ்வாறு குடிகளைக் கண்ணாகக் காத்து வருவது மன்னனின் கடமையாகும்.*

"இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்
அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சான்"

*என்னும் அடிகளால் அரசனின் கடமையை அறிய முடிகிறது.*

## சோழ நாட்டில் தொழில் வளர்ச்சிகள்

*காவிரிப் பூம்பட்டினத்தில் மருவூர்ப் பாக்கத்தில் மக்களுக்காகப் பல்வேறு தொழில்களை மன்னர்கள் உருவாக்கினார்கள். பொன்செய்கொல்லர், மரம் கொல்தச்சர், கண்ணுள் வினைஞர் போன்ற கைத்தொழில் வல்லவர் இருந்தனர். பட்டிலும், பருத்தியிலும் நெசவு செய்வோர். சுதை வேலை செய்வோர், தையல்காரர் எனப் பல்வகை தொழிலாளர் கூடி வாழ்ந்தனர். கடற்கரைப் பகுதியில் மீன் பிடிப்போர் உப்பு விளைவிப்போர் வாழ்ந்தனர். மருத நிலத்தில் உழவர் உழுது பயிரிட்டு நெல் வளம் பெருக்கினர். கரும்பு வெட்டும் தொழிலும், வெல்லம் காய்ச்சும் தொழிலும் சிறந்து இருந்தது. முல்லை நிலத்தில் ஆயர்கள் பசுக்களைக் காத்து பால், தயிர் முதலியவற்றை உற்பத்தி செய்தனர். அதனால் சிலப்பதிகாரத்தில் கரிகாலனுடைய ஆட்சியைத் "தொழில் பெருகி இருந்த காலம்" என்பர்.*

"பட்டிலும், மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக்கர் இருக்கையும்"

"பொன் செய் கொல்லரும் நன்கலந் தருநரும்

துன்ன காரரும் தோலின் துன்னரும்"
"சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு"

*என்பன தொழில் வளம் காட்டும் பாடல் பகுதிகள் ஆகும்.*

*புகாரில் மேலை நாட்டில் இருந்து வந்த அயிர் என்னும் வாசனைப் பொருளும் கீழை நாட்டில் இருந்து வந்த "கரிய அயிர்" என்னும் வாசனைப் பொருளையும் பெண்கள் புகையைப் பெருக்கி நறுமணம் கொள்ளார். மன்னன் இமயத்தில் இருந்து கொணர்ந்த ஒளிமிக்க வட்டக் கல்லில், தென் திசையில் உள்ள பொதிய மலையில் இருந்து கொணர்ந்த சந்தனக் கட்டையை அரைத்து பூசிக் கொள்வர். ஆனால் அம்மகளிர் அயல் நாட்டுப் பொருட்களைத் தவிர்த்து தென்னாடாகிய நம் நாட்டுப் பொருளையே கரிகாலன் காலத்தில் பயன்படுத்தினர் என்பதை.*

"குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குணதிசை மருங்கிற் காரகில் துறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென் மலைப் பிறந்த சந்தனம் மறுக"

*எனும் இப்பாடல் பகுதி இனிது விளக்கும்.*

*மன்னன் ஆட்சிக் காலத்தில் மேல் நாட்டுப் பொருள்களை விரும்பாது,*

தென்னாட்டுப் பொருட்களைப் பெண்கள் தலைக்கெக்டுப் பயன்படுத்தியது பாராட்டுக்கு உரியது ஆகும். ஆனால், மகளிர் வடதிசையில் இருந்து கொணர்ந்த வட்டக்கல்லில் தென்னாட்டுப் பொருட்களை அரைத்த நறுமணம் செய்து கொள்வது, வட நாட்டுப் பொருட்கள் என்றும் கீழாகவும், தென் நாட்டுப் பொருட்கள் என்றும் மேலானதாகவும் கருதியே அவ்வாறு செய்துள்ளனர் என்பது ஆய்வாளர் கருத்து.

## கீழ் மக்களையும் காக்கும் அரசன்

பறவை இனங்களில் சிறந்த இரண்டறிவு உடைய புறாவின் இறைச்சிக்கு விழைந்த பருந்து புறாவைத் துரத்தியது. அப்புறா தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, தப்பித்துப் பறந்த போது நீதி வழுவாகது அரசு செய்த சோழ மன்னனிடம் அடைக்கலம் புகுந்தது. அரசன் அப்புறாவைக் காப்பதே மனிதத் தன்மையும் அரச நீதியும் ஆகும் என உணர்ந்தான். அருகில் நின்ற புறாவை உற்று நோக்கினான். புறாவுக்கு ஈடாக வேறு இறைச்சி தருவதாக பருந்திடம் கூறிக் கொண்டான். ஆனால், பருந்தோ அரசனின் உடம்பின் இறைச்சியே தேவை என துணிவுடன் வேண்டியது.

அரசனோ மகிழ்ந்தவாறு துலாக்கோலில் தன் உடம்பின் தசை முழுவதும் அறுத்து புறா ஒரு பக்கமும், தசை ஒரு பக்கமும் வைக்கவே புறாவுக்கு ஈடாகாமல் வேறு வழியின்றி தானே துலாக்கோலில் ஏறி நின்று புறாவைக் காத்து பருந்துக்கு மன நிறைவு செய்தான். இவ்வாறு நீதி தவறாது தன்னினும் புறாவின் உயிரே பெரிது என நினைந்து நின்றவன் சோழன்.

சோழ அரசன் அறம் வளர்க்கும் செங்கோலும், தம் தன்மையில் மாறுபட்டுப் போகும். காலமும் உண்டாகா வண்ணம் ஆட்சி செய்தவன். மழை இல்லாது கொடுமை மிக்க வறட்சிக் காலத்தும் காவேரி நீரால் பாதுகாக்கப்படும் சோழ நாட்டு மக்களுக்கு சிறிதும் தீது இல்லாமல் அரசாட்சி புரிந்தவன் என்பதை “சொல்லின் செல்வன்” மாடலன் மறையோன்வழி கூறப்படும் கூற்றாக நூலாசிரியர் கூறியதை.

“குறுநடைப் புறாவின் நெடுந்துயர்தீர
எறிதரு பருத்தின் இடும்பை நீங்க
அரிந்துடம் பிட்டோன் அறந்தரு கோலும்
திரிந்துவே றாகுங் காலமும் உண்டோ
தீதோ இல்லைச் செல்லற் காலையும்”

என வரும் பாடற்பகுதி இனிதெடுத்து இயம்பி நிற்கிறது.

சோழனின் திறம்மிக்க ஆட்சியைப் பற்றி புகார்க் காண்டத்தில் கூறியதுடன், வஞ்சிக் காண்டத்தில் நீர்ப் படைக்காதையிலும் மாடலன் வழியாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவற்றில் பறவை இனங்களில் புறா உயர்வானது. பருந்து கீழானது இருப்பினும் கீழ் இனமான பருந்தாயினும் அதற்கும் நீதி ஒன்றே. அந்நீதியால் கீழ் மக்களையும் காக்கும் கடமையிலும் தவறுதல் ஆகாது என்பதை உணர்த்துவதே சிறந்த செயல்பாடாகும்.

## பாண்டிய வேந்தரின் வரலாறு

“து” யந்தன்” பேரனாகிய ஆசரிதன் புதல்வன் முதலாகப் பாண்டிய குலம் பரவிற்று என்பர். இந்திரன் சிவபூஜையால் புகழ் பெற்றான். அதனால், சிவனோ இந்திரனை நோக்கி “பாண்டிய நாட்டில் உள்ள கடம்பவனத்தை அழித்து நாடாக்கி நீ ஆள்க. உன்னிடம் மலையத்வஜன் என ஒரு புதல்வன் பிறப்பான். அவன் செய்யும் வேள்வியில் “ஊமை” மகளாகத் தோன்றுவாள். அவளை நாம் திருமணம் புரிவோம்” என்றனர். அவ்வகையில் இந்திரனே குலசேகரப் பாண்டியனாகப் பிறந்து அரசனானான். அவன் வழி முதலாக பாண்டிய ஆட்சி முறை வளர்ந்து வந்தது. அவ்வரசன் தோன்றிய குலம் சந்திர குலம் என்பர். இளங்கோ அடிகள்.

“திங்கள் செல்வம் திருக்குலம்”

என்னும் பாடல் அடியால் அறியலாம்.

### பாண்டியனின் ஆட்சிச் சிறப்பு

தொன்மையான குமரி நாடு கடல் கோளால் அழிவுற்ற பின் குமரி ஆற்றின் பகுதிக்கும், தாமிரபரணி ஆற்றுக்கும் இடையில் தங்கி வாழ்ந்தவர்களுக்குத் தலைநகரமாக இருந்தது கபாடபுரம் ஆகும். அப்பகுதியை ஆண்டவன் பாண்டிய நெடுஞ்செழியன் ஆவான். ஆட்சியின் பெருமை எண்ணற்கரியது. குடிமக்கள் அரசனைப் போற்றிப் புகழ்ந்தப் பாங்கு வானளாவியது.

மன்னன் தன் உயிரைக் காட்டிலும், பிறர் உயிரை மேலாகக் கருதியவன். தொழில் வளத்தையும், கலைப் பண்பாட்டையும் குன்றாமல் நிலைக்கச் செய்தவன். சமய வேறுபாடின்றி பாதுகாத்தவன், வீரப்புரட்சி செய்த பெண்ணிற்குத் தன் செங்கோலைச் சாய்த்தவன். குடி மக்களின் குறை கண்டு தன்குல மரபையே கொடையாகத் தந்தவன்.

### செங்கோல் குறையா மன்னவன் புகழ்

அகத்தியன் வாழ்ந்த உயர்ந்த பொதிகை மலையை ஆட்சியாகக் கொண்டவன் பாண்டிய அரசன். அவன் பகைவரை வென்றவன். ஆநிரைகளை மீட்டு, வெற்றி வாகை சூடியவன். மதுரையைச் சார்ந்த பெருங்காட்டுப் பகுதியில் கொடிய விலங்கினங்கள் வாழ்ந்தன. எனினும் அக்காட்டு வழியே செல்லும் குடிமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லை. அவ்வாறு குடிமக்களுக்கு எத்துன்பமும் இல்லாது ஆட்சி செய்ததால் குடிகள் யாவும் அரசனை வாழ்த்திப் புகழ்ந்தனர்.

பாண்டிய மன்னன் எவரினும் தலைசிறந்தவன் அதனால், இவ்வுலகை “ஊழிக்காலம் வரை. அவனே ஆள வேண்டும் என்று மக்கள் கருதினர்” கடலை வென்றிடினும். கங்கை பாயும் இமய மலையைக் கைக்கொண்டு தென்திசையைப் பாண்டிய மன்னனே ஆள்டடும் என்று விரும்பினர். “செங்கோல் ஆட்சியே வேலியாக இருந்தும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாக ஏற்று, தன் கையைக் குறைத்து, பொற்கையைச் சுமந்த வேந்தனே!” என்று மக்கள் அவன் பெருமையையும், சிறப்பையும் விளம்பிய வண்ணம் இருந்தனர்.

“உடைத்தகை, குறைந்த செங்கோல் குறையாக் கொற்றத்து”
“உருவமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவன் காக்கும் நாடென”

### பாண்டிய நாட்டினில் தொழில் வளர்ச்சிகள்

மதுரை நகரில் அங்காடி வீதிகள் தொழிலுக்கு ஏற்றவாறு தனித்தனிப் பிரிவுகளாக இருந்தன. அங்கு வண்டிகள், அதற்கு உண்டான பாகக் கருவிகள் விற்பனை செய்யப்பட்டன. வீரர்களுக்கான கவசம், அங்குசம், இடுப்பில் அணியும் பட்டிகை, தலையில் அணியும் குழியம். வெண் சாமரம், பல்வகையான கேடயங்கள். குத்துக் கோல்கள் இவையாவும் விற்பனை செய்யப்பட்டன.

செம்பு, முறிவு, உலோகங்கள், சங்கிலிகள், வெட்டும் கருவிகள், யானைத் தந்தங்களைக் கடைவதற்காக இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டன. பூவினால் புனைந்த பல்வகை மாலைகள், பல்வேறு விதமான பண்டங்கள், அரசனே காண விரும்பும் வகையில் அங்காடியில் குவிந்து கிடந்தன என்பதை,

“வையமும் பாண்டிலும் மணித்தேர்க் கொடுஞ்சியும்
மெய்ப்புகு கலசமும் வீழ்மணித் தோட்டியும்
அதன்புனை அரணும் அரியா யோகமும்
வளைதர குழியமும் வால்வெண் கவரியும்”

“அரசு விழை திருவின் அங்காடி வீதியும்”

என்னும் அடிகள் விளக்குகின்றன.

### வேனிற் காலத்திலும் குளுமையான ஆட்சி

கோடையின் காலம் எல்லோரையும் துன்புறுத்தும் காலம் ஆகும். காட்டில் உலாவித் திரியும் கன்றுகள், பெண்

யானைகள், ராஜ நடை நடக்கும் ஆண் யானைகள் நடுநடுங்கிப் போகும் கொடிய வேனிற் காலத்தில் கொளுத்தும் வெய்யிலால் தாங்க முடியாத துயரம் அடையும். கடும் நெருப்பு போன்ற வெய்யிலால் காடெல்லாம் தீப்பிடித்து எரிந்து அழிவை உண்டாக்கும். அங்கு வளரும் மரம், செடி, கொடிகள் அழிந்து மிருகங்கள் அழியக் காரணம் ஆகும். இக்கோடைக் காலத்தைத் தாங்க முடியாத மன்னன் மாட மாளிகையைத் துறந்து வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். இக் கொடுமையான காலச் சூழலில் பாண்டியன் ஆட்சி சிறப்புற்று இருந்தது. அதனால் குடிமக்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். இரு வினை வந்துற்ற போதும் இன்ப வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். கொடுமையான கோடை காலம் ஆயினும் குடிமக்கள் களிப்புடன் தென்னவன் சிறப்பை நாளும் பேசுவார்கள். அப்பொழுது அரசன் கோடைக் காலத்தில் எங்கு சென்றுள்ளானோ. எத்துன்பத்தை அடையப் பெற்றுள்ளவனாக இருக்கிறானோ, நாம் இன்புற்று இருக்கையில் அரசன் துன்புறுவது பொருந்தாதே! மன்னனின் பெருமையே மக்களின் இனிமையென மன்னனைத் தேடிய வண்ணம் கோடையிலும் குளுமை பெற்று வாழ்ந்தார்கள் என்பதை.

“பங்குனி முயக்கத்துப் பனி அரசு யாண்டுளன்”

என்ற அடியால் அறியமுடிகிறது.

## சேர வேந்தரின் வரலாறு

சேர நாடு பல பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டது ஆகும். மலை நாடு எனவும், கடல் மலை நாடு எனவும் இரு பிரிவுகளைக் கொண்டது. அதன் தலைநகரம் தற்காலத்து சேலம். கோயமுத்தூர் மாவட்டங்கள் அடங்கிய நிலப் பகுதியாகும். அதனைக் கொங்கு நாடு எனவும் கூறுவர். அங்குதான் சேரர் தலைநகராகிய வஞ்சிமாநகர் இருந்தது. இந்நிலத்தே கொல்லிமலையும், ஆனை மலைத் தொடரும் உள்ளன. மலையாளம் எனப்படும் பகுதி கடல், மலை பரவிய நிலப்பரப்பைக் குறிக்கும். மலையாளத்தில் உள்ள கடற்கழிகள் மிக்க நாட்டினைக் குட்ட நாடு என்பார். பாலக்காட்டு வாயில் தொடங்கி, தென் கன்னடம் குடகு வரையிலும் உள்ள பகுதி குட நாடு எனப்படும். பாலக்காட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் இடைப்பட்ட பகுதி பொறை நாடு எனப்படும். இவை யாவும் சேர நாட்டுப் பகுதிகளே ஆகும்.

மேற்குத் திசைக்குத் தலைவனானதால் சேர வேந்தன் குடவர் கோமான் எனப் பெயர் பெற்றான். குட்டுவன், கொங்கன், கூழியன். பொறையன் முதலியனவும் சேரனின் பட்டப் பெயர்களாகும். அங்கு விரிந்து பரந்த சேர நாடு. உயர்ந்து ஓங்கிய குன்றுகள் பலவற்றை இடையிட்டுக் கிடந்ததால் ஒரே அரசினால் ஆள முடியவில்லை. அதனால், பல பகுதிகளும் பிரிவினைகளும் உள்ளாகின. அவற்றில் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர மன்னன் பல அமைச்சர்களைக் கொண்டு நல்லாட்சி செய்தான். ஆனால், எக்காலத்தில் எவரால் யாரிடம் இருந்தது. யாரால் வெல்லப்பட்ட பகுதி என்ற செய்தி அறியக் கிடைத்தில என்பர்.

சேரன் ஆண்ட பகுதி சேர நாடு பரந்திருந்த பகுதி பற்றியும், அந்நாட்டின் மன்னனும், ஆட்சியும் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளும் நமக்குச் சிலப்பதிகாரம் தோன்றிய காலத்திலோ அதன் முன்னரோ சேர நாட்டின் பகுதிகளாக இந்நாடுகள் அமைந்து கிடந்தமை தெரிய வருகிறது. நாளடைவில் சேர நாடு விரிவடைந்த போது வென்று விரிந்த எல்லை காரணமாக இமயவரம்பன் முதலான பட்டப்பெயர்கள் மன்னருக்கு வந்திருத்தல் வேண்டும் என்பர்.

## இறைநிலையும் வழிபாடும்

பழந்தமிழர், சேயோன், மாயோன், சிவபெருமான், கொற்றவை, வாலியோன், வருணன், இந்திரன் என்னும் தெய்வங்களை மன்னன் ஆட்சியில் குறையின்றி வழிபட்டு

வந்தனர். அத்தெய்வங்கள் அனைத்தும் வேத புராணங்களால் கூறப்பட்டவை. இருப்பினும் இளங்கோ அடிகள் திருமாலைப் பற்றி அதிக அளவில் வழிபடும் தெய்வமாகக் சுட்டிக் காட்டி உள்ளார்.

"ஆயர் பாடியின் அசோதைபெற்றெடுத்த"
"அரியின் உரிவை மேகலை"
"திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்னும் அடிகளில் திருமாலைப் போற்றும் திறம் புலப்படுகிறது.

சோழன் ஆட்சியில் சைவம், வைணவம் சமணம், பௌத்தம் என்பன சமுதாய வளர்ச்சி பெற்று இருந்தன. சாக்தம், கௌமாரம் என்னும் சமயங்கள் வளரத் தொடங்கி இருந்தன. உருவ வழிபாடு போற்றப்பட்டது. எல்லா கடவுளருக்கும் அவர் தம் வாகனங்கட்கும் கோயில்கள் இருந்தன. ஆனால், அக்கால மக்கள் விரும்பிய வண்ணம் சமயத்தையும், வழிபாட்டையும் பின்பற்றி இருந்தனர். அதனை.

"உச்சிக்கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேல்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நலாக்கோட்டம் புக்கெங்கும்
தேவிர்காள் எம் உறுநோய் தீர்மென்று மேவியார்"

என்னும் சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன.

## மதித்து வழிபடும் மக்கள் மனப்பாங்கு

சிலப்பதிகாரக் காலத்து மக்கள் அரசர்களிடம் அளவற்ற அன்பு செலுத்தி வந்தனர். அத்துடன் பெரும் மதிப்பும் வைத்திருந்தனர் மன்னர்களின் பொருட்டு மக்கள் தங்களையே தியாகமும் செய்யத் துணிந்திருந்தனர். அரசர்கள் வாழ்வே தங்கள் வாழ்வு என்று எண்ணியிருந்தனர் என்னும் உண்மையைச் சிலப்பதிகாரம் தெளிவாக்குகிறது.

படை வீரர்கள் மன்னனுக்கு எவ்வித ஆபத்தும் வரக்கூடாது என்று தெய்வங்களுக்குப் பலியிடுவார்கள். மன்னனுக்கு வந்த இடையூறு நீங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்கள். "வெற்றி வேந்தன் கொற்றம் பொங்க" என்று வாழ்த்தித் தங்கள் தலைகளைத் தாங்களே அறுத்து பலிபீடத்திலே வைப்பார்கள். படை வீரர்கள் மன்னர்களுக்காக அத்தகைய அன்பினை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர் என்பதை.

"முந்தச் சென்று மழுப்பிப் பீடிகை
வெந்திறல் மன்னற் குற்றகை யொழிக்கெனப்
பலிக்கொடை புரிந்தோர் வலிக்குவரம் பாகென
கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கறைந்தோல்
பல்வேற் பரப்பினர் மெய்யுறத் தீண்டி
ஆர்த்துக் களங்கொண்டோர் ஆரமர் அழுவத்துச்
சூர்த்துக் கடை சிவந்த சுடுநோக்குக் கருந்தலை
வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி"

என வரும் சிலப்பதிகாரப் பகுதியால் அறிந்துத் தெளிய முடிகிறது.

## அரசரைத் தெய்வமாகக் காணும் மரபு

'மன்னனே மக்களுக்கு உயிர்' என்பதும் "மக்களே மன்னனுக்கு உயிர்" என்பதும் ஆகிய இருவேறு கருத்துக்கள் இலக்கிய கொள்கையாக இருந்துள்ளன. இவற்றினும் மேம்பட்டு, தங்களைக் காத்து அரசாட்சி நடத்தும் மன்னனைக் கடவுளாகவே கருதும் பண்பும், நம்பிக்கையும், ஈடுபாடும், வழிபாட்டுத் தன்மையும் பழந்தமிழ் மக்களிடம் இருந்துள்ளது. இதனை,

"திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்னும் ஆழ்வார் அமுத மொழியும் நிறுவிக் காட்டும்.

சிலம்பிலும் ஆய்ச்சியர் குரவை என்றப் பகுதியில் ஆடிப்பாடும் ஆயர் குலத்துப் பெண்டிர் மன்னரைக் கடவுளாகவே போற்றித் துதி"துப் பாடியுள்ளனர். மூவேந்தரையுமே கண்ணனின் மறுபிறப்பாக அவதாரமாகக் கருதிப் பாடியுள்ளனர்.

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பாரால்"

என்னும் இவ்வரிகளின்படி, "கோக்கப்படாத ஆரமாகிய மலைச் சந்தனம். கோத்த ஆரமாகிய கடல் முத்து. இந்திரன் மார்பிலே பூண்டிருந்த மாலை இவைகள் பாண்டிய மன்னன் மார்பிலே உள்ளன" என ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடுவோர் பாண்டிய அரசனைப் போற்றியதாக இளங்கோ அடிகள் கூறுவர்.

தேவேந்திரனுடைய மார்பின் மாலையைப் பூண்ட பாண்டியன்தான். பசு மந்தையை மேய்த்தவன். குருந்த மரத்தை ஒடித்தவன். ஆரம் சந்தனம் முத்து இவையாவும் அணிந்த பாண்டியன் வேறு அல்லன். அப்பாண்டியன் கண்ணன்தான் என்று கூறுவதை.

"பொன் இமயக் கோட்டுப் புலிபொறிந்த மண் ஆண்டான்
மன்னன் வளவன் மதில்புகார் வாழ்வேந்தன்
பொன் அம் திகிரிப் பொருபடையான் என்பரால்"

என வரும் சிலப்பதிகாரப் பாடல் அடிகள் புலப்படுத்துகிறது.

பொன்னொளி வீசும் இமயத்தின் சிகரத்திலே புலி முத்திரையை இட்டான். இவ்வுலகம் முழுவதையும் ஆண்டான். அவன் சிறந்த சோழ மன்னன். அவன் மதில் சூழ்ந்த காவிரிப் பூம்பட்டினத்திலே வாழ்கின்ற வேந்தன. அந்தச் சோழ மன்னனாகிய புகார் நகர வேந்தன் தான் போர் செய்கின்ற, பொன்னொளி வீசும் அழகிய சக்கராயுதத்தை உடைய திருமால் என்பார்கள். அவ்வாறு சோழ மன்னன் திருமாலின் உருவாகவே விளங்குகிறான் என்று கூறுவதை இளங்கோவடிகள் கீழ்க்கண்டவாறு புலப்படுத்துகிறார்.

"முந்நீரின் உள்புக்கு மூவாக கடம்பு எறிந்தான்
மன்னர் கோச்சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
நல்நவில் தோள்ஓச்சிக் கடல்கடைந்தான் - என்பாரால்"

இவ்வரிகளின் வழி கடலிலே சென்று பகவயைரசின் காவல் மரமாகிய அழியாத கடம்ப மரத்தை வெட்டி வீழ்த்தியவன் என்று கூறிச் செல்கிறார், நூலாசிரியர்.

அரசர்களுக்கு அரசனானவன் சேர மன்னன் அவன் செழிப்புள்ள வஞ்சி நகரத்திலே வாழ்கின்ற மன்னவன். அந்தச் சேர மன்னனாகிய வஞ்சி வேந்தன் தான் மலை என்று சொல்லதக்கத் தோளை அசைத்துக் கடலைக் கடைந்துத் தேவர்களுக்கு அமுதம் அளித்த திருமால் என்பார்கள் என்பது அடிகள் தரும் விளக்கம்.

இவ்வாறு ஆய்ச்சியர் குரவையில் உள்ள மூன்று பாடல் பகுதிகளிலும் சோழ, பாண்டிய, சேரர்கள் மூவரும் திருமாலின் அவதாரமே என்ற கருத்தை வெளிப்படுத்தி விளங்குகின்றன. மன்னனும் தன்னைத் தெய்வம் என்றே கருதும் அளவில் மக்களைக் காத்து அறநெறி பிறழாமல் ஆட்சி செய்து வந்திருக்கிறான் என்பதும் தெள்ளத் தெளிவாகும்.

## மணவிழாவுக்கு அரசர் வருகை

குடிமக்கள் காப்பியம் என்ற கருத்தோட்டத்துக்கு ஆதரவாகச் சிலப்பதிகாரக் கதை வணிகக் குடியினருள் தலைசிறந்த ஒருவரது திருமண நிகழ்வுடன் தொடங்குகிறது. அரசனுக்கு இணையாக வைத்து எண்ணப்படும் ஏற்றம் மிக்க குடி அது. அத்தகு மேன்மையும் முதன்மையும் கருதி அரசனே அந்த மணவிழாவிற்கு வருவதற்கு இணையாக அவனது வெண்கொற்றக் குடை வந்தது என்கிறார் இளங்கோவடிகள்.

"வெண்குடை அரசு எழுந்ததோர் படி எழுந்தன"

என்பது அப்பகுதி ஆகும். இதன்வழி மக்களில் முதன்மைப் பெற்றச் சிலரதுத் திருமணத் திருவிழாக்களில் மன்னரும் பங்குபெறும் பாங்கு, அக்காலத்தே நிலவியதை உணரமுடிகிறது (Parvath, 2015,p.65).

## அரசரும் குழுவும்

மன்னர்களுக்கு ஆலோசனையும், அறிவுரையும் வழங்குவதற்காக சிலப்பதிகாரம் காலத்தில் இரண்டு குழுக்கள் இருந்தன. ஒன்று ஐம்பெருங்குழு; மற்றொன்று எண்பேராயம். இந்த இரண்டு குழுவினரையும் கலந்து ஆலோசித்து அரசியல் நடத்தும் மன்னர்கள் தவறு செய்வதில்லை.

ஐம்பெருங்குழு என்பது ஐவரைக் கொண்ட ஓர் ஆலோசனைக் கழகம். அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியார். தூதுவர், சாரணர் என்னும் ஐவர்கள் இக்குழுவின் உறுப்பினர்கள். எண்பேராயம் என்பது எட்டு வகை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அவை. அது கணக்கர்கள் (தொழிலாளர் தலைவர்கள்), நிர்வாகத் தலைவர்கள், பொருள் காப்பாளர்கள், காவலர் எண்மரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வந்தது. இவ்விருவகை அவையினரும் மன்னன் தவறு செய்யாமல் ஆள அவனுக்கு ஆலோசனைக் கூறிவந்தனர். இக்குழுக்களைக் கலந்து ஆலோசனை செய்து கொண்ட பிறகு தான் மன்னன் ஒரு வழக்கிலே தீர்க்கமான முடிவு சொல்ல வேண்டும். ஆனால், அஃது கட்டாயமாகப் பின்பற்றப்படவில்லை என்பதும் பாண்டியன் செயலிலே நன்கு விளங்கும். என்கிறார் ஆய்வறிஞர் சாமி சிதம்பரனார்.

குழுவின் ஆலோசனைகளைக் கேளாது முடிவெடுத்த தன் தவறான நிலைப்பாட்டை பாண்டிய நெடுஞ்செழியன் நேரிடையாக வெளிப்படுத்தவில்லை. எனினும் “தன் தீர்ப்பாக” அவன் உரைத்த.

“பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்”

என்னும் முடிவுரை அக்கருத்தைக் குறிப்பால் உணர்த்தி நிற்கிறது. அவனே தொடர்ந்து

“மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது”

என்று குறிப்பிட்டு இருப்பதும் கருதத்தக்கது.

குடிமக்களாகிய மன்பதையை இடையூறின்றிப் போற்றிப் பாதுகாக்கும் உயரிய உயிர்ப்பணியில் ஆலோசனைக் குழுவினரின் அறிவுரையைக் கேட்டுப் பெறாத சூழலால் பிழை விளைந்த என்பதைப் பதிவு செய்யும் இப்பாடல் பகுதிகள் அக்காலத்தில் இருந்த ஆற்றல் மிக்க இருபெரும் குழுவினரின் முதன்மையை எடுத்துக் காட்டும் ஏற்றம் மிக்கவை.

## மக்களின் நாட்டுப் பற்று

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் குடிமக்கள் மிகுந்த நாட்டுப்பற்றைக் கொண்டவர்கள் தங்களுடைய வாழ்வை மட்டும் கருதாமல், நாடு நன்றாக சிறந்து வாழ வேண்டும் என்னும் நாட்டம் உடையவர்கள். மறக்குடி மகளிர் புகாரில் நாளங்காடி பூதத்திற்குப் பலியிட்டு வணங்குகின்றனர். அவ்வேளையில் தனிப்பட்டத் தங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டும் என்று அம்மக்கள் வேண்டிக் கொள்ளவில்லை. “சோழ மன்னன் ஆளும் பெரிய நாடு முழுவதும் வாழ வேண்டும். நாட்டில் பசிப் பிணி ஒன்றும் வரக்கூடாது. மழையும் செல்வமும் பெருக வேண்டும்” என்று வேண்டிக் கொள்கின்றனர். அதனை,

“பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும், பிணியும், பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி”

என வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம். தமிழ் மக்களின் தன்னலமற்ற நாட்டு நலம் எனும் பற்றற அறிய இது ஒரு சான்றாக அமைகிறது.

மன்னர்கள் எவ்வளவுதான் உரிமை படைத்திருந்தாலும் முறை தவறிய மன்னர்களை மக்கள் மதிப்பதில்லை. அவர்களுடைய ஆட்சி நிலைக்க விரும்புவதும் இல்லை. கொடுங்கோல் மன்னர்களின் வாழ்வைக் குலைப்பதிலே

மக்கள் உள்ளத்தால் ஒன்றுபட்டனர். அவ்வொற்றுமை உணர்வே கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தியது. இத்தகைய உணர்ச்சி மக்கள் உள்ளத்திலே குடிபுகுந்த காலம் சிலப்பதிகாரக் காலம் ஆகும். அதற்குச் சான்றாக அமைவது கண்ணகியின் வழக்கும். நடத்தையும் அதற்குப் பாண்டிய நாட்டு மக்கள் அளித்த ஆதரவும் ஆகும். அவையே சிலப்பதிகாரத்தைப் புரட்சிக் காவியம் என்று அமைத்துக் காட்டுகிறது.

### வளம் காணும் உள நலம்

சேர மன்னனைப் பற்றிய சிலம்பு தரும் செய்திகளில் ஒன்று அவன் வழக்கமாக மலை வளம் காணச் செல்லும் உள நலம் உடையவன் என்பது. அப்படி மலை வளம் காண வந்த மன்னனைக் கண்டு மக்கள் மகிழ்ந்த மாண்பினைக் காட்சிக் காதை விளக்கிக் காட்டுகிறது. மலைப்படு பொருள்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு தலை மேல் மலையைச் சுமந்து வருவது போல, அம் மலையக மக்கள் வந்து நின்று, மன்னனை வாழ்த்திக் களித்தனர்.

“ஏழ்பிறப் படியேம் வாழ்க நின் கொற்றம்.”

என்ற அவர்களது வெளிப்பாடு மன்னனை மையமிட்டே அமையும் தங்கள் நலவாழ்வு பற்றிய புலப்பாடாகும்.

### செய்தி உரைக்கும் சீர்மை

மன்னன் மலை வளம் காண்பது மக்கள் அவனைக் கண்டு மகிழ்வது மட்டுமின்றி, தங்கள் வாழ்விடப் பகுதியில் நிகழும் புதுமைகளை அவ்வப்போது மன்னனுக்குத் தெரிவிக்கும் இயல்பும் அந்நாட்டு மக்களிடம் இருந்துள்ளது.

“கான வேங்கைக் கீழோர் காரிகை
தான் முலை இழந்து தனித்துயர் எய்தி
வானவர் போன்ற மன்னனொடும் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்”

எனவரும் பாடலடிகள் மலைநாட்டு மக்கள், கண்ணகி பெற்றிய புதியச் செய்தியை மன்னனுக்கு அறிவித்த பகுதியாகும். இது மன்னரும் மக்களும் நெருங்கிய தொடர்புக் கொண்டு வாழ்ந்த திறத்தையும் தங்கள் மன்னனது ஆட்சிக்குட்பட்ட வாழ்விடப் பகுதியில் நடக்கும் புதிய செய்திகளை அவ்வப்போது மன்னனுக்குத் தெரிவிக்கும் கட்டுப்பாடு மிக்கவர்களாக மக்கள் வாழ்ந்த திறத்தையும் புலப்படுத்தி உள்ளது.

### மதிப்பளிக்கும் மாண்பு

காட்சிக் காதையில் மலையக மக்கள் உரைத்த புதிய செய்திக்குச் சாத்தனார் வழி விடை கண்ட செங்குட்டுவன், கோப்பெருந்தேவியிடம் ‘‘பாண்டிய மாதேவி - கண்ணகி இருவரில் உயரியவர் யார்?’’ என்று ஒரு வினாவை எழுப்பினான். அதற்கு அவனது தேவி வழங்கிய பதிலில் “மாற்று தேசத்து மக்களையும் மதிக்கும்” மன்னர் குல மாண்பு புலப்படுத்துகிறது.

“நம் அகனாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்”

என, தேவி கண்ணகியைப் போற்றி நிற்கும் திறம் குறிப்பிடத்தக்கது. தன் தேசம் விட்டு மற்றொரு தேசத்தில் அல்லலுற்று, நிறைவாகத் தம் தேசம் வந்த கண்ணகியை அயல் நாடு அடைந்த பத்மினி எனக் குறிப்பிட்டு, அவளையே போற்ற வேண்டும் என்று சேரமாதேவி செய்த முடிவு சீரானது, சிறப்புற்றது; மதிப்பளித்துப் போற்றும் மன்னர் குல மாண்புக்கு ஒரு தனிச் சான்று.

### செங்குட்டுவன் வெளிப்படுத்திய அரச பாரம்

மலையக மக்கள் தெரிவித்த விந்தைச் செய்திக்குரிய சரியான விளக்கத்தைத் தண்டமிழ் ஆசான் சாத்தனார் வழி உணர்ந்து சிந்தை நொந்தான் செங்குட்டுவன். பாண்டியனது தவறு இன்னது என்று உணர்ந்ததோடு மட்டுமின்றி, அவனது தவறு சரிசெய்யப்பட்டு விட்டது என்பதையும் பதிவு செய்த செங்குட்டுவன்.

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது"

என்று குறிப்பிடுகிறான். மக்களைக் காத்து மன்னர்கள் நடத்துகின்ற ஆட்சி எத்தனை இடர்ப்பாடு மிக்கது என்பதையும்

"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென"

என்ற பகுதிகளில் குறிப்பிடுகிறான். இதில் அவனது எச்சரிக்கை உணர்வும் அரச பாரத்தின் சுமையும் புலப்படுகிறது. தசரதன் மக்களை "ஏழை பாதுகாக்கும் வயல்" போலப் போற்றிக் காத்தான் என்பதும், பாரம் நீக்கப்பட்ட பகடுபோல ஆட்சி இல்லை என்றதும் இராமன் மகிழ்ந்தான் என்பதும் இங்கே ஒப்பிட்டு உணரத்தக்கது.

### ஆக்கப்பாட்டில் அரசாட்சி

கோசிக மணியின் நல்உரை கேட்ட சேரன் செங்குட்டுவன் சினம் தணிந்தான். சேரன் மங்காத ஓவியம், மறையாது மக்களால் வழிபடும் சிலையை எழுப்பிட முடிவு செய்தான். அது வரலாற்றை நிலைபெறச் செய்த ஆக்கப்பாடு. ஒரு சிலையை உருவாக்குவதே பெருமையாகும். அதற்கு மாற்றாக நிகழ்த்தப்படும் எச்செயலும் இடையூற்றைத் தரும் குற்றமாகும். இக்கருத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் தெளிவுபடுத்தியுள்ளார். அசையாத சிலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டுபோய் வேறொரு இடத்தில் நிறுவினால் அச்செயல் முற்றுப் பெறுவதற்கு முன்பே அரசனது ஆட்சி நிலை குலையும். அச்செயலுக்கு உரியவன் தான் இறப்பதற்கு முன்பு தொழுநோய் கொண்டு துன்புற்று இறப்பான் என்று கூறுவர்.

"தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தல்
ஆவதன் முன்னே அரச நிலைக்கெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்"

என்பது திருமந்திரத் திருப்பாடல்.

எந்தச் சூழலிலும் இனி வரும் காலத்திலாவது சங்க கால மன்னர் ஆட்சி செய்தது போல். ஒன்றினை உருவாக்குவதே தன் கடமையாகக் கொண்டு மக்களாட்சி நல்லாட்சியாக மலர்ந்திட வர வேண்டும். இவ்வேட்கையை வெளிப்படுத்துவதாக கண்ணகிக்குச் சிலை வடித்த சேர மாண்பு சான்று பகர்ந்து நிற்கிறது.

### மக்கள் நலம் நாடும் மனப்பாங்கு

கண்ணகி வழக்குரைத்த இடம். முற்றிலும் புதிய மன்னர் மாமன்றம். அங்கே புதியவனாகிய ஒரு பெயர் கூட அச்சமின்றி வழக்குரைக்க இருந்த வாய்ப்பு அக்காலத்தே மன்னன், மக்கள் குறை காட்டுவதில் காட்டிய ஈடுபாட்டைப் புலப்படுத்தி நிற்கிறது.

"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக் கொடியோய்"

என்று வினவும் பாண்டியன் வழக்கைப் பதிவு செய்த போது கூட தன்மீது தவறு இல்லை என்ற தெளிவுடன்.

"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெல்வேல் கொற்றம் காண்"

என்று கூஷவிளக்கம் தருகிறார். இது 'கொடியாரை வேந்து ஒறுத்தல் களை கட்டதனுடன் நேர்' என்ற குறள் வழியும் ஆகும். எனினும் ஆராயாமல் செய்த தவறு மெய்ப்பிக்கப்பட்டு மன்னனின் உறுதி குலைந்தது. இத்தகு சூழல் வழி மன்னனது கடமை அல்லது மனத்தெளிவு, அவன் புதியவராக வந்தப் பெண்ணுக்கும் வாய்ப்பு அளித்தது. முறையிட்டுக் கேட்ட மக்கள் நல மனப்பாங்கு முதலியவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது.

### மற்ற உயிர்களுக்கும் மதிப்பளித்த மாண்பு

கண்ணகி 'தேரா மன்னா" என விரித்துரைத்த உரை தேர்ச்சி மிக்கது. மன்னர்கள் மக்களை மட்டுமின்றி, மற்ற அஃறிணை உயிர்களை, அவற்றது

உணர்வுகளை எவ்வண்ணம் போற்றி மதிப்பளித்தனர் என்பதைக் காட்டி நிற்கும் ஏற்றம் மிக்கது. அவ்வுரை.

"எள்ளுறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புண்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்
தான்தன் புதல்வன் ஆழியின் மடித்தோன்
அரும்பெறல் பெரும் பெயர்ப் புகார்"

எனவரும் அப்பாடல் பகுதி புறாவுக்கு உதவிய சிபிச் சக்கரவர்த்தி. கன்றுக்கு இரங்கிய காவலனாகிய மனுநீதி முதலானோர் வரலாறுகளை எடுத்துக்காட்டி மக்களுக்கு மட்டுமின்றி, மற்ற உயிரினங்களுக்கும் மதிப்பளித்துக் காத்த சங்க கால மன்னர்களின் மாண்பினை உணர்த்தி நிற்கிறது.

## நிறைவுரை

குடிமக்கள் காப்பியத்தில் அரசரும் மக்களும் உள்ளம் ஒத்திருந்தனர். மன்னரின் கொள்கைக்கு மக்கள் மாறுபாடின்றி வாழ்ந்தனர். மன்னரின் உயிரே மக்கள் தம் உயிராகக் கொண்டனர். மன்னர் தவறு செய்யினும் தட்டிக்கேட்கும் பாங்கினைப் பெற்றிருந்தனர். மக்களின் துன்பத்தில் மன்னர்களும் பங்கு கொண்டனர். குடிமக்களின் மீது மன்னர்கள் நம்பிக்கை கொண்டு ஆட்சி செய்ததால், மக்கள் நாட்டுப்பற்று உடையவர்களாக வாழ்ந்து வந்தனர்.

## Referencess


Parvathi Vellachami. (2015). "Silappathikaaram Saattrum Penkalin Illara kadamaigal:Oru Paarvai", *Journal of Tamil Peraivu*. (Vol.1, pp.65-72).

Puliyur Kesigan. *Purananuru*. Chennai: Kalaga Veliyidu.

Ragunathan. *Ilangovadigal yaar*?. Madurai: Meenatchi Puthaga Nilayam.

Ramalingam Aranga. *Sanga Ilakiyangalil Venthar*. Chennai: Arunothayam Publications.

Ravendran Ramaiah, Arumugam Chinasamy. (2015). "Silappathikaaraththil Naattin Valarccikku Makkalin Panggu", *Journal of Tamil Peraivu*. (Vol.2, pp.37-46).

Saminatha Aiyar. *Silapathikaram Mulamum Uraiyum*.

Sanmugam, R.,K. *Silapathikaram Urai*. Kovai: Puthumalar Nilayam.

Sathasiva Pandarathar. (1997). *Pandiyan Varalaru*. (Vol 13 & Part 6). Chennai: Senthamil.

*Silambu Urai*. Sithambaram: Annamai Pathippu.

*Silapathikaram Uraiyudan*. Chennai: vartamanan Pathipagam.

Sri Chandran, J. *Silapathikaram Mulamum Uraiyum*. Chennai: vartamanan Publications.

*Thirukkural: Parimelalagar Urai*. Thirunelveli: Theninthiya Nurpathipu Kalagam.

Thirumular. *Thirumanthiram*. Tarumai Athinam Publications.